**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.82/2023</u>**

பெயர் : சட்டையப்பன் P.W.2.

த/பெ. : ரெத்தினவேல்

தேதி : 19.12.2024

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

வாதி தற்போது திருவாரூரில் குடியிருந்து வருகிறார். நான் வாதியின் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசித்து வருகிறேன், ஆனந்தவள்ளி எழுதிவைத்த வாசாஆ1 ஆன உயிலில் யார், யார் கையொப்பமிட்டுள்ளனர் என்றால் நானும், எனது எதிர்வீட்டில் வசிக்கும் வடிவேல் ஆசிரியர் அவர்களும் கையொப்பமிட்டோம். மேற்படி உயிலை எங்கு வைத்து எழுதினார்கள் என்றால் ஆனந்தவள்ளியின் வீட்டில் வைத்து எழுதினார்கள். மேற்படி விபரத்தை நான் எனது நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. வாதி ஆனந்தவள்ளிக்கு நேரடி வாரிசு இல்லை என்றால் சரிதான், வாதி ஆனந்தவள்ளியின் தங்கை மகளாவார். ஆனந்தவள்ளியில் தங்கை பெயர் என்னவென்றால் கோவிந்தம்மாள். மேற்படி விபரத்தை நான் எனது நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். உயிலினை ஆனந்தவள்ளி எழுதும் காலத்தில் அவரது வயது என்னவென்றால் 65 –70 இருக்கும்.

ஆனந்தவள்ளி வாதியை தத்து எடுத்த விபரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. சிறுவயதிலேயிருந்து ஆனந்தவள்ளி வாதியை வளர்த்து வந்தார். அவ்வாறு தத்து எடுத்ததற்கு ஆவணங்கள் இல்லை என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியும் நானும் சொத்தினை அபகரிப்பதற்காக ஆதாய சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாரிசு இல்லாத சொத்து அரசாங்கத்திற்கு சேரவேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**